நாகப்பட்டினம் நகராட்சி

**2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 -ம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்ற நகரமன்ற சாதாரன கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 11-04-2022 | பொருள் எண்.1<br>நகரமன்ற துணைத்தலைவர் திரு. எம். ஆர். செந்தில்குமார் அவர்களால் முன்மொழியப்பட்டு நகரமன்ற<br>உறுப்பினர் திரு. ஹீ. முஹமது சேக்தாவூத் அவர்களால் வழிமொழியப்பட்டு கொண்டுவரப்பட்ட தீர்மானம்.<br>சிறுபான்மை மக்கள் சிந்தை குளிர புனித ரமலான் நோன்பிற்கு ஆறு மெட்ரிக்டன் அரிசி வழங்கியமைக்கும், கஜனா காலி, கலஞ்சியம் காலி என்றில்லாமல், பெரும் கடனை தமிழக மக்கள் மீது சுமத்தியுள்ள நிலையில் அனைவரும் ஒன்றியிணைந்து வளர்ச்சி காணும் மூலமாக தமிழக நிதிநிலை அளித்து தமிழகத்தினை முன்னேற்ற பாதைக்கு அழைத்துச்செல்லும், மாண்புமிகு. தமிழகமுதல்வர் தளபதியார் அவர்களுக்கு மன்றத்தில் நன்றியும், பாராட்டும் தெரிவிக்ககோரும் தீர்மானம். | தீர்மானம் எண். 80<br>நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. |
| 11-04-2022 | பொருள் எண்.2<br>நாகப்பட்டினம் நகராட்சிப்பகுதியில் மூலதன மான்யநிதி (CGF) 2021-22-ம் ஆண்டிற்கு கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்.19089/2021/இ2, நாள்.24.12.2021-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் இப்பணியை மேற்கொள்ள 27.01.2022 ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு. | தீர்மானம் எண். 81<br>அ-கு<br>அனுமதிக்கப்பட்டது |

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்களின பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | மிக அதிகம் | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | |
| 1 | நாகப்பட்டினம் நகராட்சி காடம்பாடி பகுதியில் வடிகால் கட்டும் பணி | 600.00 | திரு. ஆர். ராஜேந்திரன், வேதாரண்யம் | 4.99 % | - | L1 |
| | | | உதயம் கன்ஸ்ட்ரக்ஷன் நாகப்பட்டினம் | - | 5.72% | L2 |

| அலுவலககுறிப்பு | 1 | இப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் L1 திரு.ஆர்.ராஜேந்திரன், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்தத்தொகையை விட 4.99% அதிகமாக உள்ளதை குறைத்து வழங்கிட 28.02.2022ல் சம்மதக்கடிதம் கோரியதில் L1 ஒப்பந்த நிறுவனம் தனது 03.03.2022ம் தேதிய கடிதத்தில் தற்போது சிமெண்ட், மணல், ஜல்லி, செங்கல், எம். சாண்ட், டீசல் மற்றும் தளவாட பொருள்களின் விலை உயர்வு மற்றும் பணியாளர்களின் கூலி உயர்வினாலும் ஒப்பந்த விலையை விட கூடுதலாக உள்ளதை குறைத்து வழங்கிட இயலாது என தெரிவித்துள்ளார். இப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை விகிதங்கள் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு அதிகமாகவும் 5.00 சதவீதத்திற்குள் மட்டும் உள்ளதாலும் நகராட்சி பொறியியல் கையேடு (Engineering |
|---|---|---|

Manual) தொகுதி 1 பகுதி 2 பிரிவு 2.7.2ல் பணியின் முக்கியத்துவம் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி முதல் அழைப்பிலேயே 5.00 சதவீதத்திற்குள் உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என உள்ளதன் அடிப்படையிலும், திட்டப்பணியாக உள்ளதாலும் இப்பணியை உடன் மேற்கொண்டு முடிக்க வேண்டியுள்ளதாலும், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

2 இதற்கான கூடுதல் செலவினத்தினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 4845/2021/இ1

11-04-2022

பொருள் எண்.3

நாகப்பட்டினம் நகராட்சிப்பகுதியில் மூலதன மான்ய நிதி (CGF) 2021-22ம் ஆண்டிற்கு கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்.19089/2021/இ2, நாள்.24.12.2021-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் இப்பணியை மேற்கொள்ள 27.01.2022 ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண்.82
அ. கு
அனுமதிக்கப்பட்டது

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு அதிகம் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு அதிகம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | |
| 1 | நாகப்பட்டினம் நகராட்சி பப்ளிக் ஆபீஸ் ரோடு மற்றும் புனித அந்தோணியார் பள்ளி வடக்கு பகுதியில் வடிகால் கட்டும் பணி | 600.00 | திரு. ஆர். ராஜேந்திரன், வேதாரண்யம் | 4.99 % | - | L1 |
| | | | உதயம் கன்ஸ்ட்ரக்ஷன் | - | 5.42% | L2 |

அலுவலககுறிப்பு

1 இப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் L1 திரு. ஆர். ராஜேந்திரன், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்தத்தொகையை விட 4.99% அதிகமாக உள்ளதை குறைத்து வழங்கிட 28.02.2022ல் சம்மதக்கடிதம் கோரியதில் L1 ஒப்பந்த நிறுவனம் தனது 03.03.2022ம் தேதிய கடிதத்தில் தற்போது சிமெண்ட், மணல், ஜல்லி, செங்கல், எம். சாண்ட், டீசல் மற்றும் தளவாட பொருள்களின் விலை உயர்வு மற்றும் பணியாளர்களின் கூலி உயர்வினாலும் ஒப்பந்த விலையைவிட கூடுதலாக உள்ளதை குறைத்து வழங்கிட இயலாது என தெரிவித்துள்ளார். இப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை விகிதங்கள் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு அதிகமாகவும் 5.00 சதவீதத்திற்குள் மட்டும் உள்ளதாலும் நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி 2 பிரிவு 2.7.2ல் பணியின் முக்கியத்துவம் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி முதல் அழைப்பிலேயே 5.00 சதவீதத்திற்குள் உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என உள்ளதன் அடிப்படையிலும், திட்டப்பணியாக உள்ளதாலும் இப்பணியை உடன் மேற்கொண்டு முடிக்க வேண்டியுள்ளதாலும், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

2 இதற்கான கூடுதல் செலவினத்தினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 4845/2021/இ1

11-04-2022

பொருள் எண்.4

நாகப்பட்டினம் நகராட்சிப்பகுதியில் கலைஞர் மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021-22ம் ஆண்டிற்கு கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள அரசாணை (எம்.எஸ்) எண். 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (என்.எஸ்) துளை நாள். 20.01.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் தலைமை பொறியாளர் சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண். 001/2022/டிஒ, நாள். 10.02.2022 தொழில்நுட்ப அனுமதி பெற்று இப்பணியை மேற்கொள்ள 14.03.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | மிக அதிகம் | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | |
| 1 | நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண். 25 ஆசாத் மார்க்கெட் மேம்பாடு செய்யும் பணி | 223.00 | திரு. ஆர். ராஜேந்திரன், வேதாரண்யம் | 4.98 % | – | L1 |
| | | | சி. சுந்தர்ராஜன், தோப்புதுறை வதாரண்யம் | – | 5.61% | L2 |

அலுவலககுறிப்பு

1 இப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் L1 திரு. ஆர். ராஜேந்திரன், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்தத்தொகையை விட 4.98% அதிகமாக உள்ளதை குறைத்து வழங்கிட 16.03.2022ல் சம்மதக்கடிதம் கோரியதில் L1 ஒப்பந்த நிறுவனம் தனது 18.03.2022ம் தேதிய கடிதத்தில் தற்போது சிமெண்ட், மணல், ஜல்லி, செங்கல், எம். சாண்ட், டீசல் மற்றும் தளவாட பொருள்களின் விலை உயர்வு மற்றும் பணியாளர்களின் கூலி உயர்வினாலும் ஒப்பந்த விலையைவிட கூடுதலாக உள்ளதை குறைத்து வழங்கிட இயலாது என தெரிவித்துள்ளார். இப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை விகிதங்கள் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு அதிகமாகவும் 5.00 சதவீதத்திற்குள் மட்டும் உள்ளதாலும் நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி 2 பிரிவு 2.7.2ல் பணியின் முக்கியத்துவம் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி முதல் அழைப்பிலேயே 5.00 சதவீதத்திற்குள் உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என உள்ளதன் அடிப்படையிலும், திட்டப்பணியாக உள்ளதாலும் இப்பணியை உடன் மேற்கொண்டு முடிக்க வேண்டியுள்ளதாலும், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

2 இதற்கான கூடுதல் செலவினத்தினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 4003/2021/இ1

தீர்மானம் எண்.83

அ. கு

அனுமதிக்கப்பட்டது

11-04-2022

**பொருள் எண்.5**

நாகப்பட்டினம் நகராட்சியில் 15-வது நிதிக்குழு மான்யநிதி Tied Grand 2021-22ம் ஆண்டிற்கு கீழ்கண்ட பணியை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 31115/2021/அம்ரூட்-2, நாள். 05.01.2022ல் அனுமதிக்கப்பட்டதன் படி 29.03.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | Purchase of Vibrating Sieve Machine 2 Nos (Capacity -TPH) at Nagapattinam and Nagore Compost Yard | 5.00 | லெட்சுமி பைப்ஸ் அண்ட் மோட்டார்ஸ், நாகப்பட்டினம் | 0.10% | - |
| | | | ஸ்ரீ சீனிவாச எலக்ட்ரிக்கல்ஸ், நாகப்பட்டினம் | - | 2.00 % |

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் களம் - 5ல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட குறைவானதாக உள்ளதை மன்றம் ஏற்கலாம். |

ந.க.எண். 2846-2/2020/இ1

தீர்மானம் எண்.84
அ. கு
அனுமதிக்கப்பட்டது

11-04-2022

**பொருள் எண்.6**

நாகப்பட்டினம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22ம் ஆண்டிற்கு கீழ்கண்ட பணியை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்.685/2022/இ6, நாள்.03.03.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதற்கிணங்க 23.03.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | நாகப்பட்டினம் நகராட்சி அமிர்தா நகரில் அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 10.00 | எம். பிரபாகரன் | 0.03% | - |
| | | | என். செந்தில்குமார் | - | 1.53% |
| 2 | நாகப்பட்டினம் நகராட்சி நாகூர் பீரோடும் தெருவில் நியாய விலைக்கடை கட்டுதல் | 10.00 | எம். பிரபாகரன் | 0.08% | |
| | | | என். செந்தில்குமார் | - | 1.20% |
| 3 | நாகப்பட்டினம் நகராட்சி வெளிப்பாளையம் நெல்லுக்கடை தெருவில் அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 10.00 | எஸ். கருணாநிதி | 0.09% | |
| | | | கே. கோபாலகிருஷ்ணன் | - | 18.01 % |

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் களம்-5ல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட குறைவானதாக உள்ளதை மன்றம் ஏற்கலாம். |

ந.க.எண். 597/2022/இ1

தீர்மானம் எண்.85
அ. கு
அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 11-04-2022 | பொருள் எண்.7<br>நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண். 14, பச்சைபிள்ளையார் கோவில் தெரு, சவேரியார் கோவில் தெரு காடம்பாடி NGO காலணி புதிய நம்பியார் நகர் ஆகிய தெரு பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணியின் போது குடிநீர் குழாய் சேதமடைந்துவிட்டதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவது பாதிப்படைவதால் பழைய குடிநீர் பகிர்மான குழாயை மாற்றி புதிதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 3.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம். 2. இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து வழங்கலாம்.<br>ந.க.எண். 845/2022/இ1 | தீர்மானம் எண்.86<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 11-04-2022 | பொருள் எண்.8<br>சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். W.P.No. 5785/22-ல் நாகப்பட்டினம் நகராட்சியில் துலக்குநராக பணியாற்றி 12.12.2007ல் பணியினை ராஜினாமா செய்துவிட்டு வன அலுவலகத்துறை (Forest Department)யில் தொழில் அலுவலராக பணியில் சேர்ந்து பணியாற்றி வரும் திரு.கி.முரளி, என்பவர் இந்நகராட்சியில் பணியாற்றிய பணிக்காலத்தையும் சேர்த்து தனக்கு பொது வருங்கால வைப்பு நிதி மற்றும் ஓய்வூதியம் வழங்கிட கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண். W.P.No.5785/22. இவ்வழக்கினை சென்னை உயர்நீதிமன்ற முதுநிலை வழக்கறிஞர், திரு.பி.சீனிவாஸ், அவர்களை எதிர் வழக்காடிட சொல்வதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 25,000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 552/2022/சி1 | தீர்மானம் எண்.87<br>அ.கு,அங்கீகரிக்கப்பட்டது |
| 11-04-2022 | பொருள் எண்.9<br>சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். W.P.No. 4422/22-ல் நாகப்பட்டினம் நகராட்சியில் வருவாய் ஆய்வராக பணியாற்றி 30.06.2018ல் ஒய்வு பெற்ற திரு. சி. பிரான்சிஸ் சில்வஸ்டர் என்பவர் தனது ஓய்வு நாளில் நிலுவையில் உள்ள காலம் கடந்த வரியினங்கள் தொகை ரூ 56,135/- செலுத்தியதை திரும்ப அசல் மற்றும் வட்டித்தொகையுடன் தனக்கு வழங்கவேண்டுமென்று சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற முதுநிலை வழக்கறிஞர், திரு.பி.சீனிவாஸ், அவர்களை நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்துவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத்தொகைரூ. 25,000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1301/2018/சி1 | தீர்மானம் எண். 88<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 11-04-2022 | பொருள் எண்.10<br>நாகப்பட்டினம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணியினை மேற்கொள்ள 16.08.2019 அன்று வார்டு எண். 13, மறைமலை நகர் ஹவுசிங் யூனிட் அருகில் நம்பியார் நகர் செல்லும் சாலையில் உள்ள பாதாள சாக்கடை வழி தடத்தில் அடைப்பு ஏற்பட்டிருந்த ஆள் நுழைவு தொட்டி (Man Hole)யில் அடைப்பினை சரி செய்யும் பணியில் ஈடுபட்ட என். சக்திவேல், (வயது – 26) காட்டு நாயக்கன் தெரு, மற்றும் ஆர். மாதவன் (வயது – 34) அமிர்தா நகர் ஆகியோர் எதிர்பாராமல் ஏற்பட்ட விபத்தில் இறந்தது தொடர்பான வழக்கு எண். W.P.No. 17380/2017 சென்னை உயர்நீதி மன்றத்தில் நடைபெற்றுள்ளதை அப்போதைய அரசு வழக்கறிஞர் திரு. ஏ. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களால் நடத்தப்பட்டு வந்தது. மேற்படி வழக்கு தொடர்பாக திருமதி. தீப்தி சுகுமார் க/பெ. சாமுவேல் புதிதாக Affadavit தாக்கல் செய்யப்பட்டுள்ளதற்கு வழக்கு W.P.No.6849/2021 (வழக்கு எண்.W.P.No.17380/2017 எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது) என எண்ணிடப்பட்டது, 30.03.2022 அன்று வாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.<br>மேற்படி புதிய வழக்கிற்கு எதிர்வாதுரை தயார் செய்து தாக்கல் செய்ய கோரி தற்போது மாநில அரசு வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்டுள்ள திரு. பி. முத்துக்குமார் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி வழக்கை திரு.பி.முத்துக்குமார் மாநில அரசு வழக்கறிஞர் சென்னை அவர்கள் மூலம் தொடர்ந்து நடத்தவும், இவ்வழக்கு கட்டணம் ரூ. 25,000/- வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண்.89<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 2 | மேற்படி வழக்கு 30.03.2022 அன்று வாதத்திற்கு வரவுள்ளதால் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் ரூ. 25,000/– வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்கியதற்கும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றத்தின் அனுமதி வழங்கலாம். | |
| | 3 | இச்செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | ந.க.எண். 454/2018/இ1 | | |

11–04–2022

பொருள் எண்.11

இந்நகராட்சிக்கு சொந்தமான அங்கீகரிக்கப்பட்ட குத்தகை இனமான 1.நாகூர் சுற்றுலா வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். 2. அருள்மிகு ஸ்ரீ நெல்லுக்கடை மாரியம்மன் கோவில் திருவிழா அடிக்கடைகள் உரிமம் ஆகியன கோவிட் – 19 காரணமாக 2020–2021 மற்றும் 2021 – 2022ம் ஆண்டு உரிமம் ஒப்படைப்பு செய்யப்படவில்லை. தற்போது ஊரடங்கு உத்தரவு பல்வேறு தளர்வுகளுடன் விலக்கிக்கொள்ளப்பட்டு அனைத்து வழிபாட்டு தளங்களும் செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி இரு குத்தகை இனங்களை பொது ஏலம் கோரி உரிமம் ஒப்படைப்பு செய்யவும், நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையத்தில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி 2018–19ம் ஆண்டின் கீழ் புதிதாக கட்டியுள்ள கழிவறையினை பொது ஏலம் கோரி உரிமம் ஒப்படைப்பு செய்யவும், நாகப்பட்டினம் பழைய பேருந்து நிலையத்தில் மகளிர் சுய உதவி குழுவினரால் பராமரித்து வந்த கழிவறையினை பொது ஏலம்விடவும் மேற்சொன்ன குத்தகை இனங்களுக்கு ஏல முன்வைப்பு தொகை கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையின் மூலமாக ஒப்படைக்கும் நாள்முதல் குத்தகை உரிமம் ஒப்படைப்பு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | குத்தகை இனத்தின் விபரம் | ஏல முன்வைப்பு தொகை | சொத்து மதிப்பு அசல் சான்றிதழ் கொடுக்கவேண்டிய தொகை | சொத்து மதிப்பு சான்றிதழ் அளிக்காவிட்டால் செலுத்தவேண்டிய கூடுதல் வைப்புத்தொகை |
|---|---|---|---|---|
| 1 | நாகூர் சுற்றுலா வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம் | 100000 | 200000 | 100000 |
| 2 | நாகப்பட்டினம் அருள்மிகு ஸ்ரீ நெல்லுக்கடை மாரியம்மன் கோவில் திருவிழா அடிக்கடைகள் உரிமம் | 50000 | 100000 | 50000 |
| 3 | நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையத்தில் கட்டியுள்ள கட்டண கழிவறையின் கட்டணம் வசூல் செய்தல் | 500000 | 500000 | 500000 |
| 4 | நாகப்பட்டினம் பழைய பேருந்து நிலையத்தில் கீழ்புறம் உள்ள கழிவறையில் கட்டணம் வசூல் செய்தல் | 50000 | 100000 | 50000 |

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |

ந.க.எண். 4730/2017/அ4

தீர்மானம் எண்.90
அ, கு
அனுமதிக்கப்பட்டது

11–04–2022

பொருள் எண்.12

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு

தீர்மானம் எண். 91
அ, கு

பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது. 15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ருட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது. தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| ஈ=600 | 1.25 |
| 601–1200 | 1.5 |
| 1201–1800 | 1.75 |
| மூ1801 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு

அனுமதிக்கப்பட்டது

கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

4) 1801 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு

7) தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 ரூ உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். மேலும் நாகப்பட்டினம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ.எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி(Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 441.49 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 115.40 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | 1334.24 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 562.66 |
| | **மொத்தம்** | **2453.79** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள்

சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், நாகப்பட்டினம் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1801 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100% உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.
9) தற்போது A மண்டல மதிப்பு ரூ.0.40 எனவும், C மண்டல மதிப்பு ரூ.1.10 எனவும் உள்ளதை A மண்டல மதிப்பு ரூ.1.10 எனவும், C மண்டல மதிப்பு ரூ.0.40 எனவும், திருத்தம் செய்யலாம்.
10) தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு கீழ்கண்டவாறு மண்டலங்கள் நிர்ணயம் செய்யலாம்.

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | மண்டலம் | மண்டல மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 11 | ஆண்டோசிட்டி | A | 1.10 |
| 2 | 11 | முல்லை நகர் | A | 1.10 |
| 3 | 11 | எம்.ஆர்.பி. நகர் | A | 1.10 |
| 4 | 13 | கே.சி.பி நகர் | A | 1.10 |
| 5 | 35 | காமராஜ் நகர் | A | 1.10 |
| 6 | 35 | சேவா பாரதி | A | 1.10 |
| 7 | 9 | மாடர்ன் நகர் | A | 1.10 |
| 8 | 12 | கிரசண்ட் நகர் | A | 1.10 |
| 9 | 12 | காந்தி நகர் | B | 0.75 |
| 10 | 12 | ஆர்.வி.ஜி.நகர் | B | 0.75 |
| 11 | 9 | வி.ஐ.பி. நகர் | B | 0.75 |
| 12 | 13 | இ.ஜி.எஸ். பிள்ளை நகர் | B | 0.75 |

11. நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை அரசாணை (நிலை) எண். 52, நாள். 30.03.2022 அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள 01.04.2022 –ம் தேதிய ந.க.எண்.40032/2012/ஆர்1 எண் சுற்றறிக்கையில் உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கியுள்ளதன் அடிப்படையில் 01.04.2022ம் தேதி முதல் சொத்துவரி சீராய்வு பணிகள் மேற்கொள்வதற்கும். வரி சீராய்வு செய்திட தேவையான படிவங்கள்/ பதிவேடுகள் ஆகியவற்றை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் வாங்கிடவும், பொதுமக்களுக்கு வரிசீராய்வு குறித்த விவரங்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திடவும் மற்றும் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்திடவும், அதற்குண்டான செலவினங்களை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1268/2022/அ1

11-04-2022

பொருள் எண்.13

நாகப்பட்டினம் நகராட்சியின் மூலதன மான்ய நிதி 2021-22ன் கீழ் வடிகால் தூர்வாரும் பணிகள் மற்றும் 15-வது மத்திய நிதி ஆணையம் 2021 -22 (Tied Up and Untied Grand ) ஆகிய திட்டப்பணிக்குரிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை விளம்பரம் செய்யப்பட்டதற்கும், அதற்கான விளம்பரக்கட்டணம் தொடர்புடைய நாளிதழ்களுக்கு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | பணியின் விவரம் | விளம்பர நிறுவனம் | தொகை விவரம் |
|---|---|---|---|
| 1 | நாகப்பட்டினம் நகராட்சி பப்ளிக் ஆபீஸ் ரோடு மற்றும் புனித அந்தோணியார் பள்ளி வடக்கு பகுதியில் வடிகால் கட்டும் பணி | Sudhan Ads | 57002 |
| 2 | நாகப்பட்டினம் நகராட்சி காடம்பாடி பகுதியில் வடிகால் கட்டும் பணி | | |
| 3 | Construction of Urban Primary Health Wellness Center (UHWC) at Samanthanpettai) Ward. 4 Block Ts.No 171-1 in Nagapattinam | Kal Publications Pvt. Ltd | 16128 |
| 4 | Construction of Urban Primary Health Wellness Center (UHWC) at Pazhantheru Ward. 1 Block .20 Ts.No 2023,2021 in Nagapattinam | | |
| 5 | Replacement of the damaged pipe line from Pallichantam to Kurukkathi Pump house | | |
| 6 | Replacement of the damaged pipe line from Eravanacheri to Kurukkathi Pump house | | |
| 7 | நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண். 7, நாகூர் பீரோடு தெருவில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | Kal Publications Pvt. Ltd | 9072 |

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |

ந.க.எண். 792/2022/இ1

தீர்மானம் எண். 92

அ.கு

அனுமதிக்கப்பட்டது

11-04-2022

பொருள் எண்.14

நாகப்பட்டினம் நகராட்சியின் மூலதன மான்ய நிதி 2021-22ஆம் ஆண்டிற்கு அக்கரைக்குளம் செல்லும் வழியில் உள்ள பாலம் கட்டும் பணி ரூ.530.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண். 19089/2021/இ2, நாள். 19.11.2021-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணித்தளத்தின் அருகே இடையூராக உள்ள வெளிப்பாளையம் கட்டுப்பாட்டிலுள்ள 3 மின்கம்பங்கள் மற்றும் பாதையை மாற்றுவதற்கான கட்டணம் ரூ.1,35,670/-மட்டும் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் நாகப்பட்டினத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம். |

ந.க.எண். 1009/2003/இ1

தீர்மானம் எண். 93

அ.கு

அனுமதிக்கப்பட்டது

11-04-2022

பொருள் எண்.15

நாகப்பட்டினம் நகராட்சியின் மூலதன மான்ய நிதி 2021-22ஆம் ஆண்டிற்கு கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண். 19089/2021/இ2, நாள். 19.11.2021-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதற்கிணங்க கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 23.03.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | நாகப்பட்டினம் நகராட்சி அக்கரைக்குளம் செல்லும் வழியில் உள்ள பழைய பாலத்தை இடித்து அப்புறப்படுத்துதல் | 5.00 | எம்/எஸ். ஸ்ரீபாலாஜி பில்டர்ட்ஸ், நாகப்பட்டினம் | 0.4% | - |
| | | | எம்/எஸ். திருமலையன் கன்ஸ்ட்ரக்ஸன் | - | 1.11 % |

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் களம் – 5ல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட குறைவானதாக உள்ளதை மன்றம் ஏற்கலாம். |

ந.க.எண். 4845/2021/இ1‘

தீர்மானம் எண். 94
அ.கு
அனுமதிக்கப்பட்டது

11-04-2022

பொருள் எண்.16

நாகப்பட்டினம் நகராட்சியின் பொது நிதியில் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 16.03.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண். 30, மாதரிமாதா கோவில் தெருவில் மழைநீர் வடிககல் தூர்வாரி பழுது நீக்கம் செய்தல் மற்றும் பாதாள சாக்கடை ஆள் இறங்கும் தொட்டி மூடி பழுது சரி செய்தல் | 1.00 | திரு. கோபாலகிருஷ்ணன் | 0.1% | - |
| | | | எம். பிரபாகரன் | - | 1.18 % |

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் களம் – 5ல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட குறைவானதாக உள்ளதை மன்றம் ஏற்கலாம். |

ந.க.எண். 455/2020/இ1

தீர்மானம் எண். 95
அ.கு
அனுமதிக்கப்பட்டது

11-04-2022

பொருள் எண்.17

நாகப்பட்டினம் நகராட்சியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் 2020-21ம் ஆண்டிற்கு அங்கன்வாடி மையங்களில் பழுது நீக்கும் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண். 1198/2021/சி1, நாள். 20.11.2021 மற்றும் 01.03.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதற்கிணங்க 30.03.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தி | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு |
|---|---|---|---|---|

தீர்மானம் எண். 96
அ.கு
அனுமதிக்கப்பட்டது

| 1 | 2 | 3 (...ல்) | 4 | 5 (குறைவு) | 6 (அதிகம்) |
|---|---|---|---|---|---|
| 1 | நாகப்பட்டினம் நகராட்சி சாமந்தான்பேட்டை ரியல் பிளாண்ட் அங்கன்வாடி மையம் கட்டிடம் பழுதுகளை சீர் செய்தல் | 2.00 | பி.ரகுநாதன் | 0.2% | - |
| | | | என். செந்தில்குமார் | - | 1.00 % |
| 2 | நாகப்பட்டினம் நகராட்சி அமிர்தா நகர் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையம் கட்டிடம் பழுதுகளை சீர் செய்தல் | 2.00 | ஆர். குணசீலன் | 0.04 % | - |
| | | | ஜி. தேவராஜ் | - | 1.00 % |
| 3 | நாகப்பட்டினம் நகராட்சி கொசப்பள்ளி தெருவில் உள்ள அங்கன்வாடி மையம் கட்டிடம் பழுதுகளை சீர் செய்தல் | 2.00 | எஸ். சத்தியநாராயணன். | 0.02 % | - |
| | | | பி.ரகுநாதன் | - | 1.00 % |
| 4 | நாகப்பட்டினம் நகராட்சி சாமந்தான்கேட்டை பகுதியிலுள்ள அங்கன்வாடி மையக்கட்டிடட் பழுதுகள சீர் செய்தல் | 2.00 | பி.ரகுநாதன் | 0.02 % | - |
| | | | என். செந்தில்குமார் | - | 1.00 % |

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் களம் – 5ல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட குறைவானதாக உள்ளதை மன்றம் ஏற்கலாம். |

ந.க.எண். 5156/2021/இ1

| தேதி | பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 11-04-2022 | **பொருள் எண்.18**<br>நாகப்பட்டினம் நகராட்சியின் மூலதன மான்ய நிதி 2021-22ஆம் ஆண்டிற்கு அக்கரைக்குளம் செல்லும் வழியில் உள்ள பாலம் கட்டும் பணி ரூ. 530.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்.19089/2021/இ2, நாள்.19.11.2021-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணித்தளத்தின் அருகே இடையூராக உள்ள மின் பாதை மற்றும் மின் கம்பத்தை மாற்றுவதற்கான கட்டணம் ரூ.97,490/-மட்டும் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் நாகப்பட்டினத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 1009/2003/இ1 | தீர்மானம் எண். 97<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 11-04-2022 | **பொருள் எண்.19**<br>நாகப்பட்டினம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-22ன் கீழ் வார்டு எண். 25, ஆசாத் மார்க்கெட் மேம்பாட்டு பணிக்குரிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான கட்டணம் ரூ.69,615/-Sreshta Communications நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 792/2022/இ1 | தீர்மானம் எண். 98<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 11-04-2022 | **பொருள் எண்.20**<br>நாகப்பட்டினம் நகராட்சி காடம்பாடி வார்டு எண்.4, பிளாக் எண்.20 நகரளவு எண்.645/3A, 1A2,646, 647/1A, 1B,1பி, 647/1A2,649/1,2,5 650/2B, 651,652/4-ல் 17047.50 ச.மீ பரப்பில் கட்டப்பட்டுள்ள பள்ளி கட்டிடத்திற்கு திட்ட அனுமதி வழங்க நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் நாகப்பட்டினம் அவர்களால் நிபந்தனைகளுடன் கூடிய | தீர்மானம் எண்.99<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இசைவு அளிக்கப்பட்டுள்ளது. சிறப்பு நிபந்தனைகள் 4 (ஏ) ல் வரிசை எண்.8ல் திட்ட அனுமதி வழங்குவதற்கு முன்னர் ஒப்புதல் நாகப்பட்டினம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண், IV ன் 60 அடி அகல D3D3 திட்ட சாலை விஸ்தரிப்பு இடத்தினை நகராட்சிக்க தானமாக ஒப்படைக்கப்பட்ட பின்னரே திட்ட அனுமதி வழங்கப்பட வேண்டும் என உள்ளது, நாகப்பட்டினம் சின்மயா வித்யாலயா தாளாளர் வார்டு எண்.4 பிளாக் எண்.20 நகராளவு எண்.652/4–ல் 111.87 சதுரமீட்டர் இடத்தினை திட்ட சாலை அமைப்பதற்கு இனமாக தானபத்திரம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பதாகவும் தெரிவித்துள்ளார், மெட்ராஸ் சின்மயா சேவா டிரஸ்டுக்கு சொந்தமான இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட நாகப்பட்டினம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.IV ல் 60 அடி அகல D3D3 சாலை விஸ்தரிப்பு இடத்தினை நகராட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைப்பதை ஏற்றுக்கொள்ள மன்றபொருள் வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு — 1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்<br>ந.க.எண். 598/2022/எப்1 | |
| 11–04–2022 | பொருள் எண்.21<br>கூட்டுறவுத்துறை மான்யக் கோரிக்கை அறிவிப்பு எண்.8 வாடகை கட்டிடங்களில் இயங்கும் நியாய விலைக்கடைகளுக்கு படிப்படியாக சொந்தகட்டிடங்கள் கட்டுவதற்கு பணிகள் மேற்க்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து நாகப்பட்டினம் பொது பணியாளர்கள் கூட்டுறவு பண்டக சாலையின் கட்டுப்பாட்டில் செயல்படும் NPSCS நாகை நியாயவிலைக்கடை (17AE00PN) சவேரியார் கோவில் வடக்கு தெருவில் வாடகை கட்டித்தில் இயங்கி வருவதாகவும் அதற்கு சொந்த கட்டிடம் கட்டிட ஏதுவாக அருகில் உள்ள வார்டு எண்.4, பிளாக் எண்.57, நகரளவு எண்.2938 உட்பிரிவு 12 A ல் 0.1254.0 ச.மீ பரப்பளவில் அரசு புறம்போக்கு நத்தம் என்ற வகைபாடு உடைய இடத்தில் அரசு திட்டங்களில் கீழ் நிதியுதவி பெற்று நியாய விலைக்கடை கட்டிடம் கட்டிட ஏதுவாக தீர்மானம் இயற்றி இசைவு தரகேட்டு வரப்பெற்ற கூட்டுறவு சங்கங்களில் இணைப்பதிவாளர் நாகப்பட்டினம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1142/2021/பொவிதி1, நாள்.04.04.2022 மன்றத்தின் பார்வைக்கு<br>அலுவலக குறிப்பு — 1. அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நத்தம் என்பதால் மறுப்பின்மை சான்று வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 001266/2022/எப்1 | தீர்மானம் எண். 100<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.22<br>நாகப்பட்டினம் நகராட்சி வார்டு 1 முதல் 18 வரையுள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் உடைப்புகள் சீர் செய்யும் பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம். 2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 845(1)/2022/இ1 | தீர்மானம் எண். 101<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.23<br>நாகப்பட்டினம் நகராட்சியின் வார்டு 19 முதல் 36 வரையுள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் உடைப்புகள் சீர் செய்யும் பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம். 2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 845(2)/2022/இ1 | தீர்மானம் எண். 102<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.24<br>நாகப்பட்டினம் நகராட்சியின் தலைமை நீரேற்று நிலையம் அமைந்துள்ள ஒடாச்சேரி மற்றும் குருக்கத்தி நீர் உந்து நிலையங்களில் இருந்து வரும் குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் உடைப்புகளை சீர் செய்யும் பணி மேற்கொள்ளவும் இப்பணிக்கான உத்தேச செலவீனம் ரூ.3.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண். 103<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 2 இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 845(3)/2022/இ1 | |
| 11–04–2022 | பொருள் எண்.25<br>நாகப்பட்டினம் நகராட்சியின் குடிநீரேற்று நிலையங்கள் மற்றும் குடிநீர் உந்து நிலையங்களிலுள்ள 2 எச்.பி.முதல் 50 எச்.பி.வரையுள்ள மோட்டார்களில் அவ்வபோது ஏற்படும் பழுதுகள், மோட்டார் காயில் மாற்றுதல் பம்பு வேலைகள் ஸ்டாட்டர்களில் ஏற்படும் பழுதுகளை சீர்செய்யுவும் இப்பணிக்கு உத்தேச செலவீனம் ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 845(4)/2022/இ1 | தீர்மானம் எண். 104<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.26<br>நாகப்பட்டினம் நகராட்சியின் பாதாள சாக்கடை திட்டப்பணியின் கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் கழிவு நீர் உந்து நிலையங்களில் உள்ள 1 எச்.பி முதல் 80 எச்.பி வரையுள்ள மோட்டார்களில் அவ்வபோது ஏற்படும் பழுதுகள், மோட்டார் காயில் மாற்றுதல் பம்பு வேலைகள் ஸ்டாட்டர்களில் ஏற்படும் பழுதுகளை சீர் செய்யுவும், இப்பணிக்கான உத்தேச செலவீனம் ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 இச்செலவினத்தை நகராட்சி பாதாள சாக்கடை நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 845(5)/2022/இ1 | தீர்மானம் எண். 105<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.27<br>நாகப்பட்டினம் நகராட்சியின் வார்டு 16 நம்பியார் நகரிலுள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியின் வளாகத்திலுள்ள தரைத்தளம் மண் குவியலாக உள்ளதால் மாணவர்கள் நடப்பதற்கு சிரமமாக உள்ளது. மேலும் பள்ளி கழிவறை பழுதுபட்டுள்ளது, எனவே அப்பள்ளி வளாகத்தில் பேவர் பிளாக் (Paver Block) தளம் அமைக்கவும், கழிவறையில் உள்ள பழுது சீர்செய்யும் பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 இச்செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 1037(1) /2022/இ1 | தீர்மானம் எண். 106<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.28<br>நாகப்பட்டினம் நகராட்சியின் வார்டு 18 நெல்லுக்கடை தெருவிலுள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் சுற்றுசுவர் இடிந்தும் கழிவறை கட்டடம் சேதமடைந்தும் உள்ளதால், மாணவ மாணவியர்களின் நலனை முன்னிட்டு சுற்று சுவர் மற்றும் கழிவறை கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 இச்செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 1037(2) /2022/இ1 | தீர்மானம் எண். 107<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.29<br>நாகப்பட்டினம் நகராட்சியின் வார்டு 26 கல்லுக்காரத்தெருவிலுள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியிலுள்ள மேற்கு பார்த்த கட்டடத்தின் கூரைபகுதி சேதமடந்துள்ளதை இடித்தும், பள்ளியின் சுற்று சுவர் சேதமடைந்துள்ளதால் புதிதாக சுற்று சுவர் அமைத்து பாரமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 இச்செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 1037(3) /2022/இ1 | தீர்மானம் எண். 108<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 11–04–2022 | பொருள் எண்.30<br>நாகப்பட்டினம் நகராட்சியின் வார்டு எண்.4 பட்டினச்சேரியில் சிறுபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.0.80 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண்.845–6 /2022/இ1 | தீர்மானம் எண். 109<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.31<br>நாகப்பட்டினம் நகராட்சியின் வார்டு எண்.13 பால்பண்ணைச்சேரி தொடக்கப்பள்ளியில் உள்ள கட்டடம் பழுதடைந்துள்ளதை சீர் செய்யும் பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>இச்செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண்.1037/2022/இ1 | தீர்மானம் எண். 110<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.32<br>நாகப்பட்டினம் நகராட்சியின் வார்டு எண்.27 காளியம்மன் சன்னதி நகராட்சி தொடக்கப்பள்ளியில் கழிவறை கதவுகள் பழுதடைந்தும், கழிவு நீர் குழாய் உடைந்தும் பழுதடைந்துள்ளதை சீர் செய்யும் பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 இச்செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண்.1037/2022/இ1 | தீர்மானம் எண். 111<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.33<br>நாகப்பட்டினம் நகராட்சியின் வார்டு எண்.25 புதுத்தெரு நகராட்சி தொடக்கப்பள்ளியில் உள்ள தெற்கு பகுதியில் உள்ள கட்டிடம் பழுதடைந்து உள்ளதை சீர் செய்யும் பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இச்செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண்.1038/2022/இ1 | தீர்மானம் எண். 112<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.34<br>**நகரமன்ற துணைத்தலைவர் திரு. எம். ஆர். செந்தில்குமார் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**<br>➢ 7–வது வார்டுக்குட்பட்ட அளவுக்காரன் தோட்டம், வண்ணான்குளம் மேல்கரை, அமிர்தா சுனாமி குடியிருப்பு ஆகிய சாலைகளை செப்பனிடவும், வண்ணான்குளம் பகுதியிலுள்ள சேதமடைந்த சிறுபாலத்தினை செப்பனிட்டு தரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 113<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.35<br>**நகரமன்ற உறுப்பினர் திருமதி.ஜி.திவ்யா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**<br>➢ 1–வது வார்டுக்குட்பட்ட சிவன் சன்னதியில் உள்ள தார் சாலை சேதம்முற்று போக்குவராத்திற்கும், பொதுமக்களுக்கும் சிரமம் ஏற்படுவதால், மேற்படி சாலையினை செப்பனிட்டு தரவும்.<br>➢ சிவன் கோவில் குளத்தின் சுற்றுச்சுழல் பழுதடைந்து இடித்துள்ளதை செப்பனிட்டு தரவும்.ஒத்தகம்மாளத்தெருவில் சிறுபாலம் மற்றும் கழிவுநீர் கால்வாயினை செப்பனிடவும், அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 114<br>தீர்மாணிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 11–04–2022 | பொருள் எண்.36<br>**நகரமன்ற உறுப்பினர் திருமதி. நா.அஞ்சலி தேவி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**<br>➢ 4–வது வார்டுக்குட்பட்ட கீழப்பட்டினசேரி பகுதியில் கன்னியம்மன் கோவிலுக்குச்செல்லும் வழியில் உள்ள மின்கம்பங்களுக்கும், இரயில்வே Line–க்கு மேல்புறம் உள்ள பண்டகசாலை தெரு கிழக்கில் தமிழ்நாடு அரசின் டீசல் விற்பனை நிலையம் இயங்கும் பகுதியில் உள்ள மின்கம்பங்களுக்கும் தெருவிளக்கு அமைத்துதர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 115<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.37<br>**நகரமன்ற உறுப்பினர் திரு.மா.தியாகராஜன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**<br>➢ 8–வது வார்டுக்குட்பட்ட MGR நகர், தும்பப்பூ மடத்தெரு, பொருமாள் மேலவீதி, ஆகிய பகுதிகளில் LED மின் விளக்கு அமைத்து தரவும்.<br>➢ MGR பகுதிகளில் மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதை செப்பனிட்டு தரவும்.<br>➢ அமிர்தா நகர் பகுதியில் உள்ள சிமெண்ட் சாலை சேதமடைந்துள்ளதை செப்பனிட்டு தரவும்.<br>➢ 8– வது வார்டில் செயல்படும் அங்கன்வாடி கட்டிடம் பழுதடைந்துள்ளதை இடித்து விட்டு அதே இடத்தில் புதிதாக அங்கன்வாடி மைய கட்டிடம் அமைத்து தரவும். | தீர்மானம் எண். 116<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.38<br>**நகரமன்ற உறுப்பினர் திருமதி.மோ. அமுதா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**<br>➢ 11–வது வார்டுக்குட்பட்ட சாமந்தான்குப்பம் அரசு உயர்நிலை பள்ளி 2020–21 ஆம் கல்வியாண்டு முதல் தரம் உயர்த்தப்பட்டு நகராட்சி தொடக்கப்பள்ளி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. அரசு உயர்நிலை பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும் இதுநாள் வரை அரசு உயர்நிலைப்பள்ளிக்குரிய இடத்தை ஒதுக்கீடு செய்து தரப்படவில்லை. இருபள்ளிகள் ஒரே வளாகத்தில் செயல்படுவதற்கும், கற்பித்தல் பணிக்கு போதிய இடவசதி இல்லாமல், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மிகுந்த சிரமப்படுகின்றனர். ஆகவே சாமந்தான்குப்பம் நகராட்சி தொடக்கப்பள்ளி வளாகத்திற்கு எதிராக அமைந்துள்ள வார்டு எண்.4, பிளாக் எண்.6, நகரளவு எண்.174, திட்ட பரப்பு 0.75435 முழுவதையும் அரசு உயர்நிலைப்பள்ளி கட்டிடம் மற்றும் விலையாட்டு மைதானம் அமைவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள இத்தீர்மான மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 117<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.39<br>நகரமன்ற உறுப்பினர் திரு. த.செந்தில்குமார் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 12–வது வார்டுக்குட்பட்ட தெத்தி புதுரோட்டில் அமைந்துள்ள அருள்மிகு சிங்கமாகாளியம்மன் கோவிலுக்கு செல்லும் சாலையினை செப்பனிட்டு தரவும்.<br>➢ வடக்கு பால்பண்ணைச்சேரி கீழத்தெருவில் அமைந்துள்ள முல்லைநகர் பகுதியில் பெருமளவில் குடியிருப்புகள் அமைந்துள்ளதால், மேற்படி பகுதிக்கு மழைநீர் வடிகால் மற்றும் தார்சாலை அமைத்து தரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 118<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.40<br>நகரமன்ற உறுப்பினர் திரு.சு.கௌதமன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 13–வது வார்டுக்குட்பட்ட தெற்கு பால்பண்ணைச்சேரியில் செயல்படும் நகராட்சி தொடக்கப்பள்ளியின் கட்டிட சுவர் மற்றும் மேற்கூரை சேதமுற்றுள்ளதால் பள்ளி மாணவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்,<br>ஆகவே மேற்படி கட்டிடத்தினை செப்பனிட்டு தரவும்,<br>➢ சிவசக்தி நகர், 4–வது குறுக்கு தெரு மண் சாலையாக உள்ளதனை சிமெண்ட் சாலையாக அமைத்து<br>தரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 119<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.41<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி.கு.ஜோதிலெட்சுமி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 15–வது வார்டுக்குட்பட்ட இளஞ்சேரன் நகர் பகுதியில் உள்ள தார்சாலை சேதமுற்றுள்ளதை செப்பனிட்டு தரவும்.<br>➢ இளஞ்சேரன் நகர் குறுக்கு சந்து , நம்பியார் நகர் ரோடு, வண்ணான்குளம் மேல்கரை ஆகிய பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்து தரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 120<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.42 | தீர்மானம் எண். 121 |

| | | |
|---|---|---|
| | நகரமன்ற உறுப்பினர் திரு. இ.எஸ்.எம்.சுரேஷ் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 16–வது வார்டுக்குட்பட்ட நம்பியார் நகரில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் தடையின்று பெறுவதற்கு ஏதுவாக மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைத்துதரவும்.<br>➢ நம்பியார் நகரில் அங்கன்வாடி மையக்கட்டிடம் இல்லாததால் மேற்படி பகுதியில் புதிதாக அங்கன் வாடி மையக்கட்டிடம் அமைத்து தரவும்.<br>➢ நம்பியார் நகர் நடுநிலைப்பள்ளியில் குடிநீர் வசதி மற்றும் கழிப்பிட வசதி ஏற்படுத்தி தரவும்.<br>➢ நம்பியார் நகர் பகுதியில் 36 மின்கம்பங்களுக்கு தெருவிளக்கு அமைத்து தரவும்.<br>➢ நம்பியார் நகர் பகுதியில் பெரும்பாலான இடங்களில் சாலை வசதி இல்லாததால் புதிதாக சாலை வசதி அமைத்து தரவும். மறைமலை நகர் பகுதியில் கழிவுநீர் கால்வாய் | தீர்மானிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.43<br>நகரமன்ற உறுப்பினர் திரு. பா.திலகர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 17–வது வார்டுக்குட்பட்ட வெளிப்பாளையம் இரயில்வே ஸ்டேஷன் ரோடு உட்புறம் வடக்கு சந்து, நகராட்சி உள்பேட்டை ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைத்து தரவும்.<br>➢ ஏழைப்பிள்ளையார் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்து தரவும்.<br>➢ நகநகராட்சி பேட்டை பகுதியில் அங்கன்வாடி மைய கட்டிடம் அமைத்து தரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 122<br>தீர்மானிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.44<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி.சு.சுபஸ்ரீ அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 18–வது வார்டுக்குட்பட்ட காளியம்மன் கோவில் தெருவில் உள்ள சிமெண்ட் சாலை மற்றும் நாடார் தெரு கடைசி சந்திப்பில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் ஆகியன சேதமுற்றுள்ளதை செப்பனிட்டு தரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 123<br>தீர்மானிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.45<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி. க. சுந்தரேஸ்வரி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 20–வது வார்டுக்குட்பட்ட சிவன் தெற்கு வீதியில் பாதாள சாக்கடையில் உடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் அருகில் உள்ள சிவன் திருக்குளத்தில் கலக்கிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். எனவே பாதாள சாக்கடையினை சரிசெய்து தரவும்<br>➢ நடுக்கண் தீர்த்த விநாயகர் சன்னதி தெருவில் உள்ள ஆஞ்சநேயர் கோவில் அருகே உள்ள சிறுபாலம் பழுதடைந்து போக்குவரத்துக்கு சிரமப்படுவதால் மேற்படி சிறுபாலத்தினை செப்பனிட்டு தரவும்<br>➢ வீரிகுளம் சந்தில் உள்ள இரண்டு தெருக்களில் பாதாள சாக்கடை குழாய் அமைத்து தரவும். | தீர்மானம் எண். 124<br>தீர்மானிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.46<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி.எஸ்.ஷோபனா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 21–வது வார்டுக்குட்பட்ட தாமரைக்குளம் மேல்கரையில் பெருமளவில் குடியிருப்புகள் அமைந்துள்ளதால், இப்பகுதியில் கழிவுநீர் வெளியேற்றுவதில் சிரமம் ஏற்படுகிறது. இப்பகுதியில் அமைந்துள்ள கழிவுநீர் கால்வாய் சேதமுற்றுள்ளதால், புதிதாக கழிவுநீர் கால்வாய் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 125<br>தீர்மானிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.47<br>நகரமன்ற உறுப்பினர் திரு.தே.மணிகண்டன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 22–வது வார்டுக்குட்பட்ட பாரதி மார்க்கெட் மேல்புறம், வடப்புறம், தர்மகோவில் சாலை சேதமடைந்து இருப்பதால் மேற்படி சாலைகளை செப்பனிட்டு தரவும்.<br>➢ பப்ளிக் ஆபீஸ் ரோடு அண்ணா படிப்பக சந்து பகுதியில் பாதாள சாக்கடை பணி முழுமையாக செய்யப்படாததால், அவ்வபொழுது கழிவுநீர் வாகனம் மூலம் உறிஞ்சப்படுகிறது, ஆகவே மேற்படி பகுதியில் முழுமையாக பாதாளசாக்கடை அமைத்து தரவும் , | தீர்மானம் எண். 126<br>தீர்மானிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.48<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி.பா.கலா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம். | தீர்மானம் எண். 127<br>தீர்மானிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | ➢ 23–வது வார்டுக்குட்பட்ட தெற்குநல்லியான் தோட்டம் பகுதியில் அமைந்துள்ள குடிநீர் குழாய் , கழிவு நீர் கால்வாய் உள்ள இடங்களில் அமைந்துள்ளதால், பொதுமக்கள் குடிநீர் பெருவதில் சிரமப்படுகின்றனர். ஆகவே குடிநீர் குழாயினை மாற்றி அமைத்து தரவும்.<br>➢ கூக்ஸ் ரோட்டில் அமைந்துள்ள கூடை முடைவோர் காலணியில் 115 குடியிருப்புகள் அமைந்துள்ளன. இதே பகுதியில் கூக்ஸ் நகர் , A.D.M. கலேஜ் ரோடு உட்பட சுமார் 500 க்கு மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. இப்பகுதியில் அமைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாய் அடைப்பு ஏற்பட்டு துண்டிக்கப்பட்டதால், இப்பகுதிகளுக்கு சரிவர குடிநீர் கிடைப்பதில்லை. ஆகவே பொதுமக்கள் பயன்பெரும் வகையில் நம்பியார் நகர் ரோட்டில் செல்லும் பகிர்மான குழாயின் வழியே இணைப்பு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | |
| 11–04–2022 | பொருள் எண்.49<br>நகரமன்ற உறுப்பினர் திரு.ர.முகுந்தன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 24–வது வார்டுக்குட்பட்ட வேதநாயகன் செட்டித்தெரு, 7–வது மற்றும் 8–வது சந்து, டீச்சர்ஸ் அவென்யூ மற்றும் ஆரியநாட்டுதெரு 9–வது சந்து மற்றும் 10–வது சந்து ஆகிய பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்து தரவும், வாய்க்காங்கரை சந்தில் தார்சாலை அமைத்திடவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 128<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.50<br>நகரமன்ற உறுப்பினர் திரு.சே,முகம்மது நத்தர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 26–வது வார்டுக்குட்பட்ட கல்லுக்காரைத்தெருவில் அமைத்துள்ள நகரவை நடுநிலை பள்ளியின் ஒரு பகுதியில் உள்ள கட்டிடம் மிகவும் சேதமுற்று இடித்து விழும்நிலையில் உள்ளதால், அதனை இடித்துவிட்டு புதிய பள்ளி கட்டிடம் அமைத்து தரவும்.<br>➢ கல்லுக்காரத்தெருவிலிருந்து அரியபத்திரப்பிள்ளைதெருவிற்கு செல்லும் கழிவுநீர் கால்வாய் சேதமுற்றுள்ளதால், பொதுமக்களுக்கும், போக்குவாரத்திற்கும் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே மேற்படி கழிவுநீர் கால்வாயினை செப்பனிட்டு தரவும்.<br>➢ நாகப்பட்டினம் பேரறிஞர் அண்ணா புதிய பேருந்துநிலையத்தில் இருந்து வந்த நேரு மேடை அகற்றப்பட்டதை மீண்டும் அதே இடத்தில் நேரு மேடை அமைக்க இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 129<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.51<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி.த. தமயந்தி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 28–வது வார்டுக்குட்பட்ட தீவட்டிக்காரன் சந்து, சட்டையப்பர் சன்னதி, கட்டியப்பர் கோவில் சன்னதி, திருக்குளம் முடுக்கு புண்டரீகக்குளம் பள்ளிக்கூடம் அருகில் ஆகிய இடங்களில் கைப்பம்பு அமைத்து தரவும்<br>➢ அபிராமி அம்மன் சன்னதியில் அமைந்துள்ள உயர் மின் கோபுரம் அமைந்துள்ள இடம், நீலா தெற்கு மடவிளாகம், சட்டையப்பர் கோவில் சன்னதி மற்றும் மடவிளாகம் ஆகிய பகுதிகிளில் தார் சாலை அமைத்து தரவும் | தீர்மானம் எண். 130<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.52<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி.மு. ஜென்னத்பேகம் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 29–வது வார்டுக்குட்பட்ட கண்ணாரத் தெரு, தோடித்தெரு பழுதடைந்த சாலையை செப்பனிட்டு தரவும்<br>➢ புதுப்பள்ளி மையவாடி, மீராப்பள்ளி மையவாடி, மரைக்காப்பள்ளி மையவாடி ஆகிய இடங்களில் மின்விளக்கு மற்றும் நடைபாதை அமைத்து தரவும்,<br>➢ வெங்காயக்கடைத்தெரு சந்திப்பு, கத்தி லெப்பை தெரு சந்திப்பு, நூல் கடைதெரு சந்திப்பு, சாலாப்பள்ளி தெரு சந்திப்பு, புதுப்பள்ளி ரோடு ஆகிய பகுதிகளில் மழை நீர் செல்லும் வகையில் சிறுபாலம் மற்றும் சாலையினை செப்பனிட்டு தரவும்.<br>➢ கத்தி லெப்பை தெருவில் உள்ள அங்காடி பகுதியில் காம்போண்ட் சுவர் (இரும்பு கேட்) அமைத்துதரவும் | தீர்மானம் எண். 131<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.53<br>நகரமன்ற உறுப்பினர் திரு. மு. பரணிகுமார் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம். | தீர்மானம் எண். 132<br>தீர்மாணிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | ➢ 33–வது வார்டுக்குட்பட்ட அக்கரைக்குளம் கீழ்கரை, அக்கரைகுளம் வடகரை மற்றும் மயானக் கொட்டகைக்கு செல்லும் சாலையினை செப்பனிட்டு தரவும். | |
| 11–04–2022 | பொருள் எண்.54<br>நகரமன்ற உறுப்பினர் திரு,ஆர்.எ.டி.அண்ணாதுரை அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 34–வது வார்டில் செயல்படும் நகராட்சி ஆரம்ப பள்ளி கூடத்திற்கு புதிதாக வகுப்பறைகளும் சுனாமிக்கு பிறகு கட்டப்பட்ட முதல் தளகட்டிடத்தின் மேல்தளம் சேதமடைந்துள்ளது. மழைக்காலங்களில் மழைநீர் கசிந்து வருவதால், கட்டிடம் சேதமடைந்து வருகிறது. ஆகவே உடனடியாக கட்டிடத்தை மறு சீரமைப்பு செய்து தரவும்.<br>➢ நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஆண்கள் அரசு மேல்நிலை பள்ளி செயல்பட நடவடிக்கை மேற்கொள்ள இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 133<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.55<br>நகரமன்ற உறுப்பினர் திரு.த.கமலநாதன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 35–வது வார்டுக்குட்பட்ட அக்கரைப்பேட்டை மேம்பாலத்தில் உள்ள மின் கம்பங்கள் அனைத்தும் சேதமடைந்து மின் விளக்குகள் எதுவும் எரியமாமல் உள்ளதால், அந்த பாலத்தில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதோடு பொதுமக்களுக்கும், போக்குவராத்திற்கும் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே மேற்படி பகுதியில் மின் கம்பங்கள் புதுப்பித்து மின்விளக்கு அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 134<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.56<br>நகரமன்ற உறுப்பினர் திரு.ப. ஞானமணி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>➢ 36–வது வார்டுக்குட்பட்ட டாடா நகர் குடியிருப்பு பகுதியின் மேற்கு பகுதியில் பன்றி மற்றும் கால்நடைகளாலும் ஊர்வன போன்ற விச ஜந்துக்களாலும் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்பட நிலை உள்ளது. இதனை தடுக்கும் வகையில் அந்த பகுதியில் சுமார் 100 மீட்டர் நீளத்திற்கும், 6அடி உயரத்திற்கும் புதிதாக சுற்று சுவர் அமைத்து தரவும்,<br>➢ மழை காலங்களில் சாலையின் தாழ்வான பகுதியில் மழைநீர் தேங்கி நிற்ப்பதால் அந்த இடங்களில் சாலையினை உயர்த்தியும் பாண்டியன் தியேட்டர் கிழக்கு புறம் மெயின் சாலை வரையும் , தியேட்டர் பின்புறத்தியிருந்து சால்ட் ரோடு வரை உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால், பொதுமக்கள் போக்குவாரத்திற்கு மிகவும் சிரமப்படுகின்றனர், ஆகவே மேற்படி சாலையினை புதுப்பித்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 135<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 11–04–2022 | பொருள் எண்.57<br>நகரமன்ற உறுப்பினர் திரு.பா. திலகர் அவர்களால் முன்மொழியப்பட்டு நகரமன்ற உறுப்பினர்<br>திரு.மோ.ஜாஹீர் உசேன் அவர்களால் வழிமொழியப்பட்டு கொண்டவரப்பட்ட தீர்மானம்.<br>நாகப்பட்டினம்நகரமன்றத்தில் நகரமன்றதலைவராக பதவிவகித்து காலஞ்சென்ற திரு.இரா.சந்திரமோகன்அவர்களுக்கும் நகரமன்ற உறுப்பினர்களாக பதவிவகித்து காலஞ்சென்ற திரு.வி.பக்கிரிசாமி , திருமதி. மு.கவிதா ஆகியோர்களுக்கு மன்றத்தில் இரங்கல் நிறைவேற்ற கோரும் தீர்மானம். | தீர்மானம் எண். 136<br>மன்றத்தில் இரங்கள் தெரிவிக்கப்பட்டது. |

/உண்மை நகல்/

(ஒம்) ந, ஸ்ரீதேவி
ஆணையர் மற்றும் தனிஅலுவலர்